மாக மக்களிடம் எடுத்துப் பேசி, மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் எடுத்துச்சொல்லி, அதைப்பற்றிய விளம்பரத்தைத் தேடுவதற்கு யார் தகுதி படைத்தவர்களாக இருக்கிருர்களோ, அவர்களை மட்டும் வரவழைக்கின்ற முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிருர்கள். கைத்தறி நெசவாளர்களுக்குள் அப்படிப்பட்ட சாமர்த்தியம் படைத்தவர்கள் ஆங்காங்கு இருப்பார்களேயானுல், அவர்களையும் வரவழைத்து ஆங்காங்கு இந்த விழாக்கள் கொண்டாடப்படும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : சமீபத்தில் ரிசர்வ் பாங்கிலிருந்து வந்த சுற்றறிக்கை ஏற்கனவே கைத்தறி சொஸைடிகளுக்கு கிடைத்து வந்திருந்த கடனை கிடைக்க விடாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே அது குறித்து அவசர கவனம் செலுத்தி, இந்த சொஸைடிகளுக்கு புது வாழ்வு அளிப்பதுபற்றி இந்த அரசாங்கம் யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒரு மூன்று நான்கு திங்களுக்கு முன்னுல் இப்படிப்பட்ட கஷ்டமான நிலை ஏற்பட்டதின் காரணமாக பல கைத்தறி சொஸைடிகள் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கும், ரிசர்வ் பாங்கிற்கும் எழுதி, இங்கிருந்து அதன் டைரக்டர் சென்று பேசியதன் விளைவாக கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் நெருக்கடி நீங்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : முந்திய அரசாங்கம், கைத்தறி கூட்டுறவு ஸ்தாபனங்கள் கருப்பு சிவப்பு கரை வேஷ்டி, துண்டு தயாரிக்கக்கூடாது என்று தடை விதித்து சுற்றறிக்கை விட்டதை இந்த அரசாங்கம் நீக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி கேட்கவேண்டும்.

திரு. கே. விநயகம் : ஆண்டுதோறும் இந்தக் கைத்தறி விழாவை நடத்துவதற்கு முக்கியமான காரணம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் தருவதற்காகத்தான் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிருர்கள். அப்படியிருந்தாலும், இத்தனை ஆண்டுகள் விளம்பரம் செய்ததன் பயனுக இந்த "ப்ளீடிங் மெட்ருஸ்" என்று சொல்லக்கூடிய அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட துணிக்கு செல்வாக்கு இருந்ததே, விருப்பம் இருந்ததே, அந்தத் துணி இப்பொழுது தேங்கிக் கிடக்கிறதே அதிகமாக விற்பனையாகாமல், இதனுடைய மௌஸ் குறைந்ததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கைத்தறி வார விழா கைத்தறித் துணிக்கு உள்நாட்டில் நல்ல மதிப்பும், செலவும் ஏற்படுவதற்காக வேண்டி கொண்டாடப்படுகிறது. "ப்ளீடிங் மெட்ருஸ்" என்ற வகைத் துணி அன்னிய நாட்டுக்கு அனுப்புவது, அது தனியான பிரச்சினை.

தொழில் நுணுக்கக் கல்வி இயக்குனர்.

*129 வினு :—**திரு. ஏ. எம். ராஜா :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தொழில் நுணுக்கக் கல்வி இயக்குனர் (Director of Technical Education) பதவியை எடுத்துவிடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

1967 ஜூலை 1]

திரு. ஏ. எம். ராஜா : ரூ. 54 கோடி கல்வித் துறைக்காக செலவு செய்யப்படுகிறது. அதில் ரூ. 1,15,00,000 தொழில் நுணுக்க கல்விக்காக செலவு செய்யப்படுகிறது. அதை நிர்வகிக்க மட்டும் ஏறக்குறைய ரூ. 10 லட்சம் செலவு ஆகிறது. ஆகவே, செலவைக் குறைக்கும் முகத்தான் ஒரு டெப்யூடி டைரக்டரை மட்டும் வைத்து, டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷனோடு இணைத்து விடுவதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்வித் துறை, துவக்கப் பள்ளித் துறை, கல்லூரி கல்வித் துறை, தொழில் நுணுக்கக் கல்வித் துறை என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக இயக்குனர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு துறையினுடைய பணிகள் அதற்காக செலவழிக்கப்படும் தொகையின் அளவைப் பொறுத்து அமையவில்லை. ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைப் பொறுத்து, அதனுடைய பணிகள் அந்த விகிதாசாரத்தில் அமையவில்லை. தொழில் நுணுக்கக் கல்வித் துறை இப்பொழுது இருக்கிற முறையில் இருந்து வருவதன் மூலம் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையை டெப்யூடி டைரக்டர் என்ற நிலைக்கு இறக்கவேண்டிய அவசியமில்லை.

திரு. எஸ். ராமச்சந்திரன் : "டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன்" பதவிக்கு வெளி நாடுகளுக்குச் சென்று நல்ல அறிவும், அனுபவமும் பெற்ற கல்லூரிப் பேராசிரியர்களையும், பிரின்ஸிபால்களையும் நியமிக்க சர்க்கார் சலுகை காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான அவசியம் ஏற்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து அனுபவம் பெற்று நிபுணர்களாக வருபவர்கள் மாணவர்களுக்குத் தேவையான சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். அது மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

திருச்சி-சென்னை விரைவு பஸ்

*130 வினா :—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திருச்சியிலிருந்து சென்னை செல்லும் பேருந்து விரைவு வண்டிகள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. கே. வினயகம் : இப்பொழுது கிடைத்திருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதில் அரசாங்கத்திற்கு லாபம் வருகிறதா, அல்லது நஷ்டம் வருகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது விடுகின்ற வண்டிகளில் நஷ்டம் வரவில்லை.

திரு. நா. காசிராமன் : இப்பொழுது பஸ்களிலே சர்க்கார் கட்டணத்தை குறைத்ததன் பயனாக அதிகப்படியான பாஸஞ்சர்கள் வருகிறார்களா? அப்படி வருவதாக இருந்தால், அதற்குத் தகுந்தபடி பஸ்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேருந்து வண்டிகளுக்குக் கட்டணத்தை குறைத்த வகையில், பிரயாணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இன்னும் அதிக வண்டிகளை விடுவது பரிசீலனைக்குப் பிறகுதான் செய்ய வேண்டும்.